SINGHEALTH / PIL / T129R0

நோயாளி தகவல் கையேடு

# தைமோல்
# வாய் கொப்பளிப்பு மருந்து

(THYMOL)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

**நுண்ணுயிர்க் கிருமிகளையும் பூஞ்சணத்தையும் எதிர்க்கக்கூடிய தைமோல் (Thymol) ஒரு கிருமிநாசினி மருந்தாகும். வாய்ச் சுகாதாரம், வாய் நறுமணம், தொண்டைப் புண் சிகிச்சை மற்றும் சிறு அளவிலான வாய் அழற்சிகளில் இது வாயைக் கழுவுவதற்கு அல்லது வாயைக் கொப்பளிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.**

## மருந்தை நான் **எப்படி** பயன்படுத்த வேண்டும்?

1 பங்கு தைமோல் கெட்டிக் கரைசலில் 3 பங்கு வெதுவெதுப்பான நீர் கலந்து கொள்ளுங்கள். இதை ஒரு நாளைக்கு 3-4 முறை பயன்படுத்துங்கள்.

மருந்தைச் சரியான முறையில் பயன்படுத்தத் தெரியவில்லை என்றால், மருந்தாளரிடம் கேளுங்கள்.

## மருந்து பயன்படுத்த **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தைத் தவறவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே பயன்படுத்துங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் கொப்பளிக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளை மருந்தை மட்டும் பயன்படுத்துங்கள். முதலில் கொப்பளிக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ பயன்படுத்தாதீர்கள்.

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

இந்த மருந்தை விழுங்கினால் இரைப்பை எரிச்சல் மற்றும் தோல் தடிப்புகள் பாதிக்கலாம்.!

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

தைமோல் கொப்பளிப்பு மருந்து குழந்தைகளுக்கும் சிறு பிள்ளைகளுக்கும் ஏற்றதல்ல. தைமோல் கொப்பளிப்பு மருந்தை ஒருபோதும் விழுங்காதீர்கள்.

வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால் நீங்கள் அதைக் கண்டிப்பாக மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும்: முகம்/கண்கள்/உதடுகள் வீங்கும், மூச்சு விடச் சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பம் மற்றும் நேரடி வெளிச்சம் படாதவாறு, அறை வெப்பநிலையில் ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள்.